# Environmental Thoughts in the Seventh 'Oozhi' Essays

**Dr. A. Kamalam**
*Associate Professor, Advanced Tamil Studies*
*Doak Perumatti College, Madurai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346638

**Abstract**
*Author P. Ainkaranesan points out that for all the sufferings experienced by the natural environment, the sole cause is humankind. To escape from this catastrophe, he insists that man must abandon his dominance over the earth and return to a relationship of cooperation. This book, which consists of forty-two essays, spans a wide range of topics, beginning with worms and insects and extending up to global warming. The work Ezhavadhu Oozhi ("The Seventh Apocalypse") opens with an essay on global warming, and in the very next chapter it criticizes America, which is seen as a major cause. Some essays also aim to show that the environment is not merely a social issue. They highlight dangers such as how modern kitchen utensils themselves have become poisonous, how jeans as a symbol of civilization are harmful to the environment, the hazards caused by cell phones, and the toxic nature of products like Coke, Pepsi, pesticides, plastics, and asbestos.*
***Keywords:*** *Seventh Epoch, Plastic, Blue Poison, Disaster, Management, Partnership, Alarm Bell, Barren Planet, Color Dyes, Soft Drinks, Violence*

**References**

1. Seventh Oozhi – Ainkaranesan, Po. S., p. 56.
2. The success of modern life lies in Harmony with Nature, Editor. Ms, S. Jeyalakshmi, 346.
3. Seventh Oozhi – Ainkaranesan, Po. S., p. 88.
4. Melathu, Po. S., p. 140.
5. Akananuru (4:10 & 12) - http://vaiyan.blogspot.com
6. wordpress.com
7. Seventh Oozhi – Ainkaranesan, Po. S., p. 365.

**Books Used**

1. Ainkaranesan, Po. S. – Seventh Oozhi, Sema Madu Publications, 2010.
2. Jeyalakshmi S., The success of modern life lies in Harmony with Nature, Department of Human Excellence, N.G.M college, Pollachi, 2017.

**Websites**

1. http://vaiyan.blogspot.com
2. http://wordpress.com

# ஏழாவது ஊழி கட்டுரைகளில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்

***முனைவர் அ. கமலம்***
இணைப் பேராசிரியர். தமிழ் உயராய்வு நடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***

*இயற்கைச் சூழல் அனுபவித்து வரும் அனைத்து துயரங்களுக்கும் ஒற்றை இனமான மனிதனையே காரணம் சுட்டும் ஆசிரியர் பொ.ஐங்கரநேசன், பேரழிவில் இருந்து தப்புவதற்கு மனிதன் புவியின் மீது மேலாண்மை செய்வதை விடுத்து கூட்டாண்மை உறவிற்குத் திரும்பவேண்டும் என வலியுறுத்துகிறார். நாற்பத்தோரு கட்டுரைகள் அடங்கிய இந்நூலின் பேசுபொருள் புழு, பூச்சியில் தொடங்கிப் புவிவெப்பமாதல் வரைக்கும் விரிவாக அமைகிறது. 'ஏழாவது ஊழி' நூல் புவி வெப்பம் குறித்த கட்டுரையுடன் ஆரம்பமாகும் நூல், அடுத்த அத்தியாயத்திலேயே அதற்குக் காரணமான அமெரிக்காவை விமர்சனம் செய்கிறது. சூழல் என்பது சமூகம் மட்டுமே சார்ந்த அம்சம் அல்ல என்பதை உணர்த்தும் நோக்கிலும் கட்டுரைகள் உள்ளன. நவீன சமையலறையில் உள்ள பாத்திரங்களே நஞ்சாகும் அவலம், நாகரீக உடையான ஜீன்ஸ் சூழலுக்கு எவ்வாறு எதிரானது. செல்லிட பேசிகள் விளைவிக்கும் அபாயம், கோக்-பெப்சி போன்ற பூச்சி மருந்துகள், பிளாஸ்டிக், அஸ்பெஸ்டாஸ் போன்றவை குறித்து அபாய மணி அடித்து கட்டுரைகள் எச்சரிக்கை செய்கின்றன.*

***திறவுச் சொற்கள்:*** *ஏழாவது ஊழி, பிளாஸ்டிக், நீல நஞ்சு, பேரழிவு, மேலாண்மை, கூட்டாண்மை, அபாயமணி, மலட்டுக்கோள், வண்ண நிறமூட்டிகள், செயற்கை சுவையூட்டிகள், மென்பானங்கள், வன்முறைகள்*

## முன்னுரை

ஏழாவது ஊழி என்பது சுற்றுச்சூழல் குறித்த கட்டுரைகளைக் கொண்ட பொ. ஐங்கரநேசன் எழுதிய ஒரு தமிழ் நூல் ஆகும். இது சேமமடு பதிப்பகம் மூலம் 2010 இல் வெளியிடப்பட்டது. புவி வெப்பம், சூழலியல், அமெரிக்காவின் பங்கு, மற்றும் மனிதர்கள் சுற்றுச்சூழலுடன் எப்படி இயைந்து வாழ வேண்டும் என்பது போன்ற கருத்துகளை இந்த நூல் ஆராய்கிறது. புவி வெப்பம், சூழலியல். சுற்றுச்சூழலியல் மற்றும் சமூகம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் தலைப்புகள் இதில் விவாதிக்கப்படுகின்றன. இயற்கையைப் புரிந்து கொண்டு அதன் ஓர் அங்கமாக வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. சூழலியல் என்பது வெறுமனே படிப்பு மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை முறை என்பதை விளக்குகிறது.

## நூலின் பொருண்மை

"சூழலியல் வெறுமனே கல்வி அல்ல. அது இயற்கை. இரத்தமும் சதையும் என்பார்களே; அதுபோல. இயற்கையில் தோய்ந்து அதன் அங்கமாகவே அனுபவித்து வாழுகின்ற வாழ்க்கை தான் சூழலியல் என்று சொல்லும் பொ. ஐங்கரநேசன் இந்நூலில் புவிக்கோளை அச்சுறுத்திவரும் பல்வேறு சூழலியற் பிரச்சினைகளை விரிவாக விளக்கியிருக்கிறார்.

இயற்கைச் சூழல் அனுபவித்து வரும் அனைத்து துயரங்களுக்கும் ஒற்றை இனமான மனிதனையே காரணம் சுட்டும் இவர் பேரழிவில் இருந்து தப்புவதற்கு மனிதன் புவியின் மீது மேலாண்மை செய்வதை விடுத்து கூட்டாண்மை உறவிற்குத் திரும்பவேண்டும் என வலியுறுத்துகிறார்.

நாற்பத்தோரு கட்டுரைகள் அடங்கிய இந்நூலின் பேசுபொருள் புழு, பூச்சியில்

தொடங்கிப் புவிவெப்பமாதல் வரைக்கும் விரிவாக அமைகிறது. "ஏழாவது ஊழி" நூல் புவி வெப்பம் குறித்த கட்டுரையுடன் ஆரம்பமாகும் நூல், அடுத்த அத்தியாயத்திலேயே அதற்குக் காரணமான அமெரிக்காவை விமர்சனம் செய்கிறது. சூழல் என்பது சமூகம் மட்டுமே சார்ந்த அம்சம் அல்ல என்பதை உணர்த்தும் நோக்கிலும் கட்டுரைகள் உள்ளன. நவீன சமையலறையில் உள்ள பாத்திரங்களே நஞ்சாகும் அவலம், நாகரீக உடையான ஜீன்ஸ் சூழலுக்கு எவ்வாறு எதிரானது. செல்லிட பேசிகள் விளைவிக்கும் அபாயம், கோக்-பெப்சி போன்ற பூச்சி மருந்துகள், பிளாஸ்டிக், அஸ்பெஸ்டாஸ் போன்றவை குறித்து அபாய மணி அடித்து கட்டுரைகள் எச்சரிக்கை செய்கின்றன.

சிலந்தி, வண்ணத்துப்பூச்சி, தவளை, கடற்குதிரை ஆகியவை குறித்த கட்டுரைகள் நமது வாழ்நாளிலேயே பல உயிரினங்கள் அழிவைச் சந்திக்கும் அவலத்தைச் சொல்கின்றன. இவற்றின் அழிவு என்ன விளைவை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையையும் கூறியுள்ளார்.

மனிதக் குரங்குகளையும் குரங்கு மனிதர்களையும் அடையாளம் காட்டும் கட்டுரை மிகவும் ரசனையுடனும் ஆழ்ந்த அறிவுடனும் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக சிம்பன்சி, போனபோ வகை குரங்குகளின் பாலியல் வாழ்வை ஒப்பிடுவதன் மூலம் மானுடவியலின் துவக்கத்துக்கான அடிப்படை சுட்டிக்காட்டப்படுகிறது.

சுற்றுச்சூழல் மனித வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த காரணியாகும். இந்த உலகம் நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் பூதங்களால் ஆனது. மனிதன் இயற்கையைத் தவறான முறையில் கையாண்டதன் வினைவாக உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பாதிக்கப் படுகின்றது.

### பிளாஸ்ரிக்கின் பிடியில் பூமி

"மடத்தனமான நுகர்வுப் பழக்கங்களை ஊக்குவிக்கின்ற, கழிவுகளை மேலும் அதிகரிக்கின்ற, புதுப்பிக்க இயலாத சக்தி வளங்களை அழிக்கின்ற வாழ்க்கை முறை சுற்றுச்சூழலை முன்கேட்டிராத, கற்பனைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பாதிப்படையச் செய்து வருகிறது"[1] என்பது ஃபிடல் காஸ்ட்ரோவின் சூழலியல் பார்வையாக அமைகிறது.

தரையில் மட்டுமல்லாமல் நெகிழியின் வல்லாட்சி கடலிலும் நீளுகிறது. முதல் உலகநாடுகள் தாங்கள் பயன்படுத்தி வீசும் நெகிழிக் கழிவுகளை மிகவும் நாசூக்காக மூன்றாம் உலக நாடுகளின் தலையில் கட்டத் தொடங்கியுள்ளன. கணிசமான சலுகை விலையில் நெகிழிக் கழிவுகளை விற்பதுடன் கூடவே நெகிழிக் கழிவுகளில் இருந்து நெகிழியை மறுஉற்பத்தி செய்யும் நுட்பத்தையும் சேர்த்துத் தருவதால் மூன்றாம் உலகநாடுகளும் நெகிழிக் கழிவுகளை வாங்கிக் குவித்து வருகின்றன.

நெகிழியின் ஏகபோக வளர்ச்சி சத்தமில்லாமலே பூமியைச் சாகடித்துக் கொண்டிருக்கிறது. பூமியின் மேனியெங்கும் நெகிழி தன் கோரப்பற்களைப் பதித்து நிற்கிறது என்ற இந்த உண்மையைச் சமீபகாலமாகத் தான் உலகம் உணரத் தொடங்கியுள்ளது. நெகிழியின் தன்மைகளை, நன்மை என ஆரம்ப காலத்தில் மக்கள் நினைத்துள்ளனர். காரணம் அது லேசானது. தண்ணீரில் கரையாது. துருப்பிடிக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக மக்கிப்போகாது. இந்தச் சிறப்புத் தன்மைகளுடன் அன்று பந்தயத்தில் ஓடத் தொடங்கிய நெகிழி, மற்ற உலோக - மரப்பொருள்களை ஓரம் கட்டி விட்டதென ஆசிரியர் இக்கட்டுரையில் சுட்டுகிறார். நிலத்தடி நீரை உள்ளே செல்ல விடாமல் தடுத்து மண்ணுக்குக் கீழே கண்ணுக்குத் தெரியாமல் இயங்கிக் கொண்டிருக்கும் நுண்ணுயிரிகளின் உலகத்தை வெகுவாகப் பாதிக்கிறது. நெகிழியின் பிடியில் பூமி சிக்கி உழல்வதை இக்கட்டுரை குறிப்பிடுகிறது.

**நீல நஞ்சு**

"நமது போலிநாகரிகம், பகட்டு, ஆடம்பரம் ஆகியவற்றைக் கைவிட்டால் தான் சூழல்கேட்டிலிருந்து நம்மைக் காப்பாற்ற முடியும்" என கோவை ஞானி அவர்களின் எச்சரிக்கைக் குரல் அமைகிறது. சிறு விவசாயிகள் கவர்ச்சிகரமான கடனுதவி போன்ற விளம்பரங்களினால் பருத்திச் செய்கைக்குத் தாவியிருக்கிறார்கள். எதியோப்பியாவின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக மிகவும் வளமான அஸ்வான் பள்ளத்தாக்கின் 60 விழுக்காட்டுப் பகுதி பருத்திக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தைப் பெறுவதற்காக உள்ளூர்வாசிகள் வலுக் கட்டாயமாகக் காட்டுப் பகுதிகளுக்குக் குடிபெயர்க்கப்பட்டார்கள். ஜீன்ஸுக்காக அந்த ஏழைகளின் வயிறுகளைக் காயவைத்ததோடு காட்டுத் துகிலையும் உரிந்து கொடுக்க வேண்டிய அவலத்தையும் எதியோப்பியா இன்று அனுபவித்து வரும் சூழலியல் அவலங்களுக்கான காரணத்தையும் ஆசிரியர் இக்கட்டுரையில் சுட்டிச் செல்கிறார். எதியோப்பியாவைத் தொடர்ந்து, உஸ்பெகிஸ்தானும் சுற்றுச்சூழல் அவலத்திற்கு ஆளாவதைக் கீழ்க்காணும் சான்றில் குறிப்பிடுகிறார்.

கைக் குழந்தைகளின் மரண விழுக்காடு உலகிலேயே அதிகமாக உள்ள இடங்களாக ஏரல் கடலை ஒட்டிய பகுதிகள் ஆகிவிட்டன.

உஸ்பெகிஸ்தான் பருத்திக்காகக் கொடுத்திருக்கும் இந்த விலை மிகமிக அதிகம். அந்நிய செலாவணியாக எவ்வளவு டாலர்கள் கிடைத்தாலும் இதனை ஈடுசெய்ய முடியாது. ஏரல் ஓர் உதாரணம் தான். பருத்தி வயல்கள் எல்லாவற்றிலும் ஆழக்குழாய் இறக்கி பூமியின் தொண்டை வறளவறள நீரை உறிஞ்சியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என ஆசிரியர் தமது ஆதங்கத்தை இக்கட்டுரையில் வெளியிடுகிறார்.

"பருத்தியின் தாகம் பெரியது. சோவியத் ஒன்றியத்தின் ஒரு அங்கமாக விளங்கிய உஸ்பெகிஸ்தான் இன்று பருத்தி ஏற்றுமதியில் இரண்டாவது இடத்திலும் பருத்தி உற்பத்தியில் ஆறாவது இடத்திலும் உள்ளது. இந்த இலக்கை எட்டுவதற்கு உஸ்பெகிஸ்தான் பருத்திக்கு ஒரு கடலையே குடிக்கக் கொடுத்திருக்கிறது. நம்பமுடியாத உண்மை இது. உஸ்பெகிஸ்தானையொட்டி ஏரல் கடல் உள்ளது. 1960களில் சோவியத் ஒன்றியம் ஏரல் கடலுக்கு நல்ல தண்ணீரை வழங்கிக் கொண்டிருந்த அமுர்தாரியா, சைர்தாரியா ஆறுகளைப் பருத்தி விளைவிப்பதற்கு நீர் வேண்டித் திசை திருப்பி விட்டது. படிப்படியாகச் சுருங்கத் தொடங்கிய கடலில் இப்போது பாதிக்கு மேல் இல்லை. கரையில் இருந்து 100 கிலோ மீட்டர் தள்ளிச் சென்றுதான் மீன்பிடிக்க வேண்டிய நிலை. அதுவும் 30 வகையான மீன்கள் இருந்த கடலில் 2 வகையான மீன்களே எஞ்சியுள்ளன எனக் குறிப்பிட்டு பருத்தியின் தாகத்திற்காக, அதாவது பருத்தியின் விளைச்சலுக்காக, பிறநாடுகளுக்கு வழங்குவதற்காக இழப்புகளாக ஏரல் கடற்கரையின் அழிவு சுட்டப்படுகிறது.

**ஆடம்பரம் என்னும் நீல நஞ்சு**

"செயற்கை வேதியியல் உரங்கள் பூச்சிக் கொல்லி மருந்துகள் பயிர்களுக்கும் மனிதர்களுக்கும் மனித உடமைகளுக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சி இனங்களை அழிப்பதற்காகப் பூச்சி மருந்துகள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயிரிடும் நிலங்களைக் கடந்து ஆற்றில் சேர்வதால் இது நீர் மாசு அடைந்து மீன்களுக்கு கேடுவிளைவிக்கின்றன. பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் வேளாண்மையில் செயற்கை வேதியியல் உரங்கள் அதிகமாக பயன்படுத்தப் படுவதாலும் நீர் மாசு அடைகிறது"[2] என சூழலியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

"இந்தியர்கள் தாம் வாழும் சூழலுக்குப் பொருந்தாத ஆடை ஜீன்ஸ். அதிக குளிர் உள்ள தேசங்களில் உடுத்தப்படும் உடை. பருத்திக்கு வேறு எந்த பயிர்களையும் விடவும் அதிக அளவிலான பூச்சிக் கொல்லிகள் தேவைப்படுகின்றன. உலகில் உபயோகிக்கப்படும் பூச்சிக்கொல்லிகளில் கால்வாசி பாகம் இந்த பருத்திச் செடிகளின் மீது தான் தெளிக்கப்படுகிறது"[3] என நீலநஞ்சு எனும் கட்டுரையில் குறிப்பிட்டுச் செல்கிறார்.

"பருத்தி நூல்களை நீலமேற்ற இண்டிகோ சாயம் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் அறிமுகத்தின் போது சில அவுரை இனச் செடி மற்றும் கடல் நத்தைகளில் இருந்து பெறப்பட்ட இண்டிகோ அதன் பிறகு முற்றும் முழுதாகச் செயற்கை இரசாயனங்களைக் கொண்டே உற்பத்தி செய்யப்படுகிறது.'[4]

உண்ணும் உணவு தொடங்கி உடுத்தும் உடை வரை பூச்சிக்கொல்லிகளின் ஆதிக்கத்தையும் அதனால் சுற்றுச்சூழல் மாசடைவதோடு மக்களும் பிணிகளால் பீடிக்கப்பட்டு மாளுவதை இதன்வழி உணரமுடிகிறது. ஒரு படைப்பாளர் தமது ஆதங்கத்தை கோபத்தை கதையாக, கவிதையாக எடுத்துச் சொல்வது இயல்பு. ஆனால் இந்நூலின் ஆசிரியர் தமது கட்டுரைத் தொகுப்பிலும் வன்மையாகக் கடிந்துள்ளார்.

### காதினுள் பாயும் நஞ்சு

**"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாது உண்பறவை பேதுறல் அஞ்சி**
**மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்"[5]**

சிறுஉயிரினங்களுக்குக் கூட ஒலிமாசு ஏற்படக் கூடாது என்று வாழ்ந்தவர்கள் தாம் நம் முன்னோர். ஆனால் இன்று வாகனங்கள் ஒலிப்பெருக்கிகள், மின்னணுச் சாதனங்கள் ஆலைகள் போன்றவற்றின் பேரிரைச்சல் மக்களையும் சிட்டுக் குருவி போன்ற சிற்றினங்களையும் அழிவின் விழிப்பிற்கு இட்டுச்; செல்கிறது. இதனைக் காதினுள் பாயும் நஞ்சு எனக் குறிப்பிட்டுச் செல்கிறார்.

### மென்பானங்களின் வன்முறைகள்

**"நீர்சுருக்கி நெய் உருக்கி மோர்பெருக்கி உண்பவர்தம் பேருரைக்கப் போமே பிணி"[6]**

தாங்க முடியாத வெயில் உடலைச் சுட்டெரிக்கிறது. நா வறண்டு விட்டது. குளிர்ச்சியான பானம் அருந்துவதற்கு மனது தவிக்கிறது. உங்கள் ஞாபகத்துக்கு வருவது பெப்ஸி மற்றும் கோக் குடும்பத்துப் பானங்கள். மென்பானங்கள் என்றால் என்ன? மேலும் மேலும் பருகுவதற்குத் தூண்டும்சுவையூட்டிகள்,தித்திக்கவைக்கும் வெல்லங்கள், கண்ணைக் கவரும் வண்ண நிறமூட்டிகள், நாசியை நிரப்பும் நறுமண இரசாயனங்கள், நுரைத்தெழச் செய்யும் கரியமிலவாயு போன்றவற்றை நீரில் கலந்து பெறும் இரசாயனங்களின் கலவைதான் மென்பானங்கள். இத்தகைய மென்பானங்கள் வன்மை மிகுந்தனவாக மனித உடலையும் இயற்கையையும் பாதிக்கின்றன எனவும் இனம் புரியாத பல நோய்கள் மனித உடலைப் பீடிப்பதையும் ஆசிரியர் சுட்டிச் செல்கிறார்.

### மாசுபாடு

தீங்கு விளைவிக்கின்ற பொருள்கள் நீரில் கலப்பதால் நீர் மாசடைகிறது. தொழிற் சாலைகளில் பயன்படுத்துகிற நச்சுக் கூறுகள் நீரில் கலந்து பெருமளவு நீரை மாசுபடுத்துகின்றன. தண்ணீர், காற்று யாவும் மாசுபடுகின்றன. தொழிற்சாலை கழிவுகள் நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றன. நகர்ப்புற கழிவுகளும் தொழிற்சாலைக் கழிவுகளும் நகரத்தில் உள்ள வாய்க்காலில் கலந்து நீரோட்டத்தை அசுத்தமாக்குகின்றன. மேலும் முன்னர்காலத்தில் வயலில் இயற்கை

உரம் பயன்படுத்தினர். ஆனால் தற்போது ரசாயன உரங்கள், பூச்சக்கொல்லி மருந்துகள் ஆகியவை அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் இவை வாய்க்காலின் வழியே சென்று ஆறுகளில் கலக்கிறது. இதை மூலமும் நீர் மாசடைகிறது. நதிக்கரையோர தொழிற் சாலைகள் நதியைப் பெருமளவில் மாசுபடுத்துகின்றன. இதன் மூலம் நீரின் தரம் குறைந்து நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. மேலும் தற்போது ஆற்றில் அதிக அளவில் காணப்படும் மணற்கொள்ளைகள் மூலமும் ஆறுகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. தற்போது இவற்றைக் கட்டுபடுத்தாவிட்டால் பிற்கால சந்ததியினருக்கு நீர் இல்லாமல் போய்விடும்.

## இயற்கைக்கு எதிரான நடவடிக்கைகள்

நெகிழியைத் தவிர்ப்பதன் மூலம் இயற்கையுடன் இணைந்து வாழமுடியும். மக்கும்தன்மை கொண்ட பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் இயற்கையைப் பாதுகாக்க முடியும். காடுகளில் உள்ள மரங்களை உயிரினங்களைக் கொல்லுதல் கூடாது. உயிரினங்களைக் கொன்று அதன் தோல்களைப் பல்வேறு அழகு சாதனங்களாகப் பயன்படுத்தக் கூடாது. காடுகளை அழித்தல் கூடாது. வீடுகளில் உள்ள இயற்கை மருந்துக்களான இஞ்சி, பட்டை, கிராம்பு, துளசி செடி போன்ற இயற்கை மருந்துகள் வளமான வாழ்வு வாழ வழிவகுக்கிறது. மரம், செடி, கொடிகள் மனிதனுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள் போன்ற உணவுத் தானியங்களை மனிதனுக்குத் தருகிறது. ஆனால் மனிதன் மரங்களை அழிப்பதை நாம் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழர்களின் பாரம்பரியமான நம்பிக்கை சார்ந்த மருத்துவ முறையில் வேம்பிற்கு என்று ஒரு தனித்துவமான இடமுண்டு. வேப்பிலை, பட்டை, பூ அதன் விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் முதலிய அனைத்தும் மருத்து வக்குணம் உடையவை. சுற்றுச்சூழலை மதிக்கவும் அதோடு இணைந்து வாழவும் கற்றுக்கொள்வதற்குத் திரும்ப வேண்டும். இயற்கை அன்னை மக்களுக்குத் தேவையான பொருள்களை வாரி, வாரி வழங்குகின்றது.

ஏழாவது ஊழி என்ற கட்டுரையில் ஆசிரியர் இவ்வுலகம் தோன்றியதில் இருந்து தற்போது வரை ஏராளமான உயிரினங்கள் அழிவுற்றுள்ளதென குறிப்பிடுகிறார். இக்கட்டுரையில் குறிப்பிடும் போது,

"மலட்டு கோள்களுக்கு நடுவே பெறுதற்கரிய மக்கள் பேற்றைப் பெற்றிருக்கும் ஒரே கிரகம் நமது பூமித்தாய் மாத்திரம் தான். ஆனால் தன் மடிநிறைய உயிரினங்களைத் தாலாட்டும் பூமி இப்போது தனது உயிர் வளத்தைக் காவு கொடுக்கும் கால ஊழிக்குள் வேகமாக பிரவேசிக்கத் தொடங்கியுள்ளாள்"[7] என்று குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

எனவே இந்த பூமியை அழிவின் வாயிலிருந்து மீட்டெடுப்பு என்பது இயலாத காரியமாகத்தான் உள்ளது ஏனென்றால் ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு உயிரினம் அழிவுக்கு உள்ளாய் வருவதை நாம் காண்கிறோம். உலகின் பல்வேறு இடங்களில் பல்வேறு உயிரினங்கள் அழிவுக்கு உள்ளாகி உள்ளன. சீனாவின் பாண்டா கரடி, ஆப்பிரிக்காவின் மலைக் கொரில்லாக்கள், இந்தியாவின் புலிகள், நீள திமிங்கலங்கள் இவை எல்லாம் இன்று அழியும் தருவாயில் உள்ள உயிரினங்களாக அழிந்து கொண்டிருக்கக் கூடியவனாக நாம் பார்க்கிறோம். எனவே பூமி தோன்றிய நாளிலிருந்து இப்போது வரை ஒரு நிலத்தில் வாழும் உயிரினங்களில் ஐந்தில் ஒரு பங்கும் நிலத்திலும் நீரிலும் வாழக்கூடிய உயிரினங்களில் மூன்றில் ஒரு பங்கும் தண்ணீரில் வாழக்கூடிய உயிரினங்களில் 34 விழுக்காடு மட்டுமே இன்று உயிரோடு

இருப்பதாக சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.

## முடிவுரை

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற புறநானூற்றுக் கூற்று சமநிலையைப் பேணக் கூடியதாக இருந்தாலும் இன்றைய சூழலில் "பழையன அழிதலும் புதியன மறுத்தலு"மாகத் தான் உயிரினங்களின் கொள்கை அமைகிறது. இதற்குக் காரணம் மனிதனின் வருகையே. இயற்கைச் சூழல் சமநிலை என்பது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. ஏனென்றால் மனிதன் நிறைய உயிரினங்களை அழிப்பதோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ நிறைய உயிரினங்கள் அழிவிற்கு மனிதன் காரணமாக இருக்கிறான். மனிதப் பிறவி என்பது மகத்துவம் நிறைந்தது. இயற்கையின் மதிப்புணர்வுகளுக்கு மதிப்பளித்து சூழல் சமனிலையோடு மனிதன் வாழ்வதே அனைத்திலும் சாலச் சிறந்தது என்ற உணர்வை "ஏழாவது ஊழி' என்ற கட்டுரைத்தொகுப்பு உணர்த்தியுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. ஏழாவது ஊழி, ஐங்கரநேசன். பொ, ப - 56
2. The success of modern life lies in Harmony with Nature, Editor. Ms,S.Jeyalakshmi, 346.
3. ஏழாவது ஊழி, ஐங்கரநேசன். பொ., ப - 88
4. மேலது, ப- 140
5. அகநானூறு (4: 10-12) http://vaiyan.blogspot.com
6. wordpress.com
7. ஏழாவது ஊழி, ஐங்கரநேசன். பொ., ப - 365

## உதவிய நூல்கள்


1. ஐங்கரநேசன். பொ., .ஏழாவது ஊழி, சேமமடு பதிப்பகம், 2010.
2. Jeyalakshmi S., The success of modern life lies in Harmony with Nature, Department of Human Excellence, N.G.M college, Pollachi, 2017.


## இணைய தளங்கள்


1. http://vaiyan.blogspot.com
2. http://wordpress.com